# IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.

## O.S.No.176 /2012

## Deposition of witness for PW3

| | | | |
|---|---|---|---|
| Name | : பழனி (வட்டாட்சியர், காட்பாடி) | Caste | : - |
| Father's Name | : (லேட்) முருகேசன் | Calling | : - |
| Village | : காட்பாடி | Religion | : இந்து |
| Taluk | : - | Age | : 47 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the 17 day of July, 2019.

Chief Examination

நான் காட்பாடி வட்டாட்சியராக பணியில் உள்ளேன். எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணையின் பேரில் இன்று சாட்சியம் அளிக்கிறேன். நான் வாதி தரப்பு சாட்சி-3. எனக்கு வந்த அழைப்பாணையில் வாதிகள் அவர்களுடைய மாமியார் கோ.எலிசபெத் அம்மாள் அவர்களுடைய கிருஸ்டியான்பேட்டை கிராமத்தில் வன்றந்தாங்கல் பஞ்சாயத்து பெயரில் பட்டா எண்.55 சர்வே எண். 64 தற்பொழுது உட்பிரிவு செய்யப்பட்டு சர்வே எண். 64/1 என புதியதாக பட்டா எண். 882, வி.டி.ஆர்.155/ஏ பாசலை 1400 என்று குறிப்பிட்டுவிட்டு ஜோஜப்பகவுண்டர் மனைவி சோ.எலிசபெத்அம்மாள் என்பவர் பட்டா எண். 33 என்று இருந்தது. அதனை எப்படி பட்டா மாற்றம் செய்தீர்கள். பட்டா எண்882-க்கு இதற்கான புரசிடிங்க்ஸ் பத்திர ஆவணங்கள் கலெக்டர், தாசில்தார், ஆர்.ஐ., வி.ஏ.ஒ போட்ட உத்தரவு மற்றும் விசாரணை அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுவும் இதனுடன் சான்று நகல் தாக்கல் செய்யவும் என்று குறிப்பிட்டுள்ள இவை இரண்டு பட்டா எண்களில் 1940 முதல் 2012 டிசம்பர் வரை உள்ள அ பதிவேடு அசல் ஆவணங்கள் மற்றும் சான்றிட்ட நகல் எடுத்து வந்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவும் மற்றும் சர்வே எண்.64/1 நிலஉரிமை பதிவேடு எண்.225867 கிராம எண். 139 என்று குறிப்பிட்டு திருமதி. எலிசபெத் அம்மாள் என்பவர் பெயரிலுள்ள வருவாய் ஆவணங்கள் பட்டா எண். 55 மேற்கண்ட ஆவணங்கள் அனைத்தும் அசல் மற்றும் சான்றிட்ட நகல் 1940

முதல் 2012 டிசம்பர் வரை எடுத்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவும் மற்றும் சம்மனுடன் இணைக்கப்பட்டுள்ள அ பதிவேடு பட்டா பாஸ்புக், வருவாய் ஆணவங்கள் சரிபார்த்து சான்றிட்ட நகலாக நீதிமன்றத்தில் சாட்சி சொல்வதற்கான அடியில் கண்ட ஆவணங்களை எடுத்து வர நீர் வரவேண்டியிருக்கும் என கண்டு எனக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டிருந்தது. அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களான டிடி.ஆர்.155ஏ பட்டா மாறுதல் செய்யப்பட்ட ஆண்டு 1400 பசலியாகும். அதாவது 1991. பட்டா மாறுதல் கோப்புகள் மாவட்ட டி.ஓ.எம். படி (மாவட்ட அலுவலக நடைமுறை) 3 ஆண்டுக்குள் முடிக்கப்படும். இந்த அழைப்பாணையில் கோரப்பட்டுள்ள ஆவணத்தின் வருடம் 1991 என்பதால் அந்த ஆவணம் அழிக்கப்பட்டுவிட்டது. 1940ம் ஆண்டிலிருந்து 1984 நில உடமை மேம்பாட்டு திட்டத்திற்கு முந்தைய காலத்திற்கான அ பதிவேடு வட்டாட்சியர் அலுவலகத்தில் பராமரிக்கப்படுதில்லை. உதவி இயக்குநர் நில உடமை மற்றும் பராமரிப்பு துறை, வேலூர் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறது. சர்வே எண். 64/1 என்பது பட்டா, சிட்டா மற்றும் அடங்கல் யார் யார் பெயரில் உள்ளது என்று கேட்டால், ஜோஜப்பகவுண்டர் மனைவி எலிசபெத் அம்மாள் என்பவர் பெயரில் இருந்துள்ளது. கோ.எலிசபெத் அம்மாள் பெயரிலிருந்த பட்டா எண்.882-க்கான கோப்பு என எழுதப்பட்டுள்ளது. கோ.எலிசபெத் அம்மாள் சர்வே எண். 64/1, பட்டா வேறு ஒரு பெயருக்குமாற்றி கொடுக்கவேண்டும் என்றால் எலிசபெத் அம்மாள் யாருக்காவது கிரையப்பத்திரம் எழுதி கொடுத்திருந்தால் தான் மாற்ற தர இயலும். பசலி 1400-க்கான ஆவணங்கள் குடியாத்தம் வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்தன. 1998-ம் ஆண்டு தான் காட்பாடி வட்டம் பிரிக்கப்பட்டது. எனவே அதற்கான ஆவணங்கள் எங்கள் அலுவலகத்தில் இல்லை. 1984-க்கு பிறகு நிலஉடமை மேம்பாட்டு திட்டத்திற்கு பிறகு ஏற்பட்ட அ பதிவேடு எங்களிடம் உள்ளது. சர்வே எண். 64 மட்டும் கோ.எலிசபெத் அம்மாள் என்பரது பெயரில் 0.67.0 ஹெக்டேர் நிலத்தை பொறுத்து பெயரில் நிலஉடமை மேம்பாட்டு திட்டத்திற்கு பிறகு அவர் பெயரில் உள்ளது. பட்டா எண்.55 அவர் பெயரில் உள்ளது. சர்வே எண்.64

அப்போது உட்பரிவு எதுவும் செய்யப்படவில்லை. சா்வே எண். 64-ல் ஜோஜப்ப கவுண்டா் பெயரில் அ பதிவேடு அல்லது பட்டா, சிட்டா எதுவும் இல்லை. குடியாத்தம் வட்டாட்சியா் அலுவலகத்தில் இதற்கான ஆவணங்கள் இருக்கும். பட்டா மாறுதல் சம்மந்தமாக ஏற்படும் கோப்புகளை 3 ஆண்டுகளில் அழித்துவிடுவோம். 1400 பசலி என்பது 1428 கழித்தால் 1991-ம் ஆண்டு பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளது. நிலஉடமை மேம்பாட்டு திட்டத்திற்கு முந்தைய காலகட்டத்திற்கான ஆவணங்கள் நிலம் சம்மந்தப்பட்ட ஆவணங்கள் உதவி இயக்குநா் அலுவலகத்தில் பராமரிக்கப்படுகிறது. அழிக்கப்பட்டதிற்கான ஆவணங்கள் குடியாத்தம் வட்டாட்சியா் அலுவலகத்தில் பராமரிக்கப்படுகிறது. அ பதிவேடு நகல் Ex.X5 ஆகும். பட்டா எண். 882-க்கான சிட்டா நகல் Ex.X6 மற்றும் பட்டா 55-க்கான சிட்டா நகல் Ex.X7. புல எண்.64-க்கான வரைபடம் Ex.X8 பட்டா எண். 882-க்கான கணினி சிட்டா (16.07.2019-ல் அச்சிடப்பட்டது) Ex.X9. சா்வே எண். 64/1-க்கான அடங்கல் நகல் Ex.X10.

<u>குறுக்கு விசாரணை</u>

வன்றந்தாங்கல் கிராமம் சா்வே எண். 64/1 புலமானது பட்டா எண். 882 புனித அன்னம்மாள் மடம் என்ற பெயரில் பதிவாகியுள்ளது. ஆவணங்கள் அனைத்தும் மற்றும் கிரைய ஆவணம் ஆகியவற்றை எல்லாம் சரிபாா்த்த பின் தான் பட்டா மாற்றம் செய்யப்படும். நான் விசாரணை எதுவும் மேற்கொள்ளவில்லை. புனித அன்னாள் மடம் எத்தனை ஆண்டுகள் இயங்கி வருகிறது என்று எனக்கு தெரியாது. கிராமநிா்வாக அலுவலரை நான் விசாரிக்கவில்லை. சா்வே எண். 64 யாா் கிரையம் பெற்றாா்கள் என்று நான் விசாரிக்கவில்லை. Ex.X5, அ பதிவேட்டில் உள்ள 88-க்கான விவரம் எனக்கு தெரியாது. Ex.X6 -ல் புனித அன்னாள் மடம் கிருஸ்டியான் பேட்டை என்று உள்ளது என்றால் சரிதான். Ex.X7 சிட்டாவில் பட்டா எண். 882 போக்கு என குறிப்பிடப்பட்டள்ளது என்றால் சரிதான். அது புனித அன்னாள் மடம் என்று உள்ளது என்றால் சரிதான். Ex.X8 கணினி சிட்டாவிலும் புனித அன்னாள் மடம்

என்றும் கிருஸ்டியான் பேட்டை என்று உள்ளது என்றால் சரிதான். புனித அன்னாள் மடத்திற்கு வேறு சில சொத்துக்களும் அந்த பட்டாவில் புனித அன்னாள் மடத்திற்கு சொந்தமானது என குறிப்பிடப்பட்டள்ளது என்றால் சரிதான். Ex.X10 அடங்கல் ஆவணத்திலும் புனித அன்னாள் மடம் கிருஸ்டியான்பேட்டை என்று தான் உள்ளது என்றால் சரிதான். பட்டா மாற்றம் செய்யும் போது அதற்கான எல்லா ஆவணங்களை சரிபார்த்து தான் பெயர் மாற்றம் செய்வோம் என்றால் சரிதான். ஏற்கனவே இருந்த அலுவலர் சரியான பரிசீலனை செய்து அதன்படி வன்றந்தாங்கல் கிராமம் புல எண்.64/1 புனித அன்னாள் மடத்திற்கு ஆவணங்களை சரிபார்த்து தான் பெயர் மாற்றம் செய்திருப்பார் என்றால் சரிதான். இன்றைய தேதியில் வருவாய் ஆவணங்களின் அடிப்படையில் சர்வே எண். 64/1 புனித அன்னாள் மடத்திற்கு சொந்தம் என்றால் சரிதான்.

(Sd/-)..R.Rajamaheswar
DISTRICT MUNSIF
KATPAD I.